தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

# செய்தி மடல்

செய்தி 15 மடல் 1 ஜனவரி – 2015 ₹1.00


## 31ஆவது தேசியக் கோழியினக் கருத்தரங்கு




தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகமும் இந்தியக் கோழியின அறிவியல் சங்கமும் இணைந்து, பண்ணையாளர்கள் மற்றும் கோழியின வல்லுநர்கள் பயன் பெறும் வகையில் உலகளாவிய வர்த்தகத்தில் கோழிகள் உற்பத்தி குறித்த 31ஆவது தேசியக் கோழியினக் கருத்தரங்கை நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 18.12.2014முதல் 20.12.2014வரை நடத்தின. மாண்புமிகு தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. டி.கே.எம். சின்னய்யா அவர்கள் கருத்தரங்கைத் துவக்கிவைத்து, சிறப்புரை ஆற்றி, கருத்தரங்க மலரினை வெளியிட்டார். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். இப்பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் இரா. பிரபாகரன் அவர்கள் கருத்தரங்கின் மையப்பொருள் குறித்துக் கருத்துரை ஆற்றினார். இந்தியக் கோழியின அறிவியல் சங்கப் பொதுச் செயலாளர் முனைவர் வி.கே. சக்சேனா அவர்கள் சங்கத்தின் செயல்பாடுகளை எடுத்துரைத்தார். நிகழ்ச்சியில் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திரு. வ. தட்சிணாமூர்த்தி இ.ஆ.ப., நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி. ஆர். சாந்தி, பரமத்திவேலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. உ. தனியரசு ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் கொ.ஆ. துரைசாமி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கருத்தரங்கின் அமைப்புச் செயலாளர் முனைவர் கு. மணி அவர்கள் நன்றியுரை ஆற்றினார். இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து 250 க்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள், கல்வியாளர்கள், தொழில் முனைவோர், மாணவர்கள் மற்றும் பலர் கருத்தரங்கில் கலந்து கொண்டனர். கருத்தரங்கில் வாழ்நாள் சாதனையாளர் விருது, இளம் விஞ்ஞானிகள் விருது மற்றும் முனைவர் பி. கோதண்டபாணி நினைவு விருது ஆகியவை சாதனையாளர்களுக்கு வழங்கப்பட்டன. கருத்தரங்கின் நிறைவு விழாவில் ஓய்வுபெற்ற பேராசிரியர் முனைவர் து. சந்திரசேகரன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கினார்.

## துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி

அன்புள்ள வாசகர்களே!

வணக்கம். இனிய, வளமான புத்தாண்டு மற்றும் பொங்கல் தின நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். 25 ஆண்டு காலப் பெருமை மிக்க இப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். பெருமகிழ்ச்சி கொள்கிற அதேவேளையில், இந்தியாவில் முதன் முதலாக உருவாக்கப்பட்ட தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் பயின்ற எனக்கு இப்பல்கலைக்கழகத்திற்குச் சேவையாற்றும் வாய்ப்பு வாய்த்திருக்கிறது. 20.09.1989இல் மூன்று உறுப்புக் கல்லூரிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இப் பல்கலைக்கழகம், 25 ஆண்டுகளில் குறிப்பிடத் தக்க வகையில் சிறந்த வளர்ச்சியை எட்டியுள்ளது. இத் தருணத்தில், நான் ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன். 7 உறுப்புக் கல்லூரிகள், 7 ஆராய்ச்சி நிலையங்கள், 11 ஆய்வகங்கள், 21 பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள், 3 உழவர் பயிற்சி மையங்கள், 3 வேளாண் அறிவியல் நிலையங்கள், ஒரு வேளாண்மைத் தொழில்நுட்பத் தகவல் மையம், ஒரு பல்கலைக்கழக நூல் வெளியீட்டுப் பிரிவு எனத் தமிழ்நாடு முழுவதற்கும் விரிந்து பரந்துள்ள இப்பல்கலைக்கழகம்,



உலக அளவில் வளர்ச்சி பெறுவதற்குப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் மற்றும் நிர்வாகப் பணியில் இருப்போர் தங்களின் கடின உழைப்பை வழங்கிவருகிறார்கள்.

வேகமாக வளர்ச்சியடைந்து வரும் கால்நடை மற்றும் உணவுத் துறையில் மனித ஆற்றல் தேவையைக் கவனத்தில் கொண்டு இப் பல்கலைக்கழகத்தில் பி.டெக். (பால்வளத் தொழில்நுட்பம்), பி.டெக். (உணவுப் பதப்படுத்தல் தொழில்நுட்பம்) மற்றும் பி.டெக். (கோழி வளர்ப்புத் தொழில்நுட்பம்) ஆகிய இளநிலைப் பட்டப் படிப்புகளும், உயிர் புள்ளியியல், உயிர்த் தகவலியல், உணவுப் பதப்படுத்தல் தொழில்நுட்பத்தில் முதுநிலைப் பட்டப் படிப்புகளும், வனவிலங்கு அறிவியலில் முனைவர் பட்டப் படிப்பும், சிறிய பிராணிகள் எலும்பு முறிவுச் சிகிச்சை, கால்நடைக் கண் மருத்துவச் கிசிச்சை, சிறிய பிராணிகள் அவசர மற்றும் தீவிரச் சிகிச்சை, சிறிய பிராணிகள் தோல் மருத்துவச் சிகிச்சை, வணிக முறையிலான கோழி வளர்ப்பு, தீவன உற்பத்தித் தொழில்நுட்பம் ஆகியவற்றில் இணைய வழியிலான முதுநிலைப் பட்டயப் படிப்பும் புதிதாகத் துவங்கப்பட்டுள்ளன.

ஆராய்ச்சியில் இப்பல்கலைக்கழகத்தை உலக அளவில் முதனிலை பெறச்செய்யும் நோக்கில் கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் பிற உயிர் அறிவியல் புலங்களில் சிறந்த ஆராய்ச்சியை செய்வதற்கு நாம் கடமைப் பட்டிருப்பதோடு, சிறந்த பொதுக் கொள்கை, வளமான பொருளாதாரம் மற்றும் தரமான வாழ்விற்குப் பங்களிப்பு செய்யவும் விரும்புகிறோம். பல்கலைக்கழகத்தின் பல்வேறு ஆய்வகங்களில் உள்ள சிறந்த உள்கட்டமைப்பு வசதிகள், தேசிய மற்றும் பன்னாட்டு நிதி முகமைகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. நமது பல்கலைக்கழகம், தலைசிறந்த பன்னாட்டுப் பல்கலைக்கழகங்கள், பொது நிதியளிப்பு முகமைகள் மற்றும் தனியார் நிறுவனங்களோடு சிறந்த கூட்டிணைவுகளைச் செய்து கொண்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் விரிவாக்கப் பணியானது இந்தியாவில் உள்ள மற்ற மாநிலப் பல்கலைக்கழகங்களைவிட மிகவும் சிறந்ததாக அமைந்து, கால்நடை வளர்ப்போர், களப்பணிக் கால்நடை மருத்துவர்கள், கால்நடைப் பராமரிப்புத் துறை, நிதியளிப்பு முகமைகள் மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் ஆகியோரிடையே இரு வழித் தொடர்பில் நடைபெற்று வருகிறது. பல்கலைக்கழகத்தின் விரிவாக்கப் பணி, அளிக்கப்படும் பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளின்மூலம் கால்நடை வளர்ப்போரை மேம்படுத்துவதோடு நிற்காமல் கவனத்திற்கு வராத பகுதிகளில் கால்நடை வளர்ப்போர் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு வழி காண்பதாகவும், அவர்களின் பொருளாதாரச் செயல்பாட்டிற்கு உதவிகரமாகவும் உள்ளது. இதுபோலவே கொள்கை வடிவமைப்பாளர்கள் தங்களின் வளர்ச்சிக்கான வழிமுறைகளை வடிவமைப்பதற்கும், ஆராய்ச்சித் திட்டங்களுக்கும் உதவுகிறது.

வேளாண்மையைச் சார்ந்து தங்களின் வாழ்க்கையை அமைத்துக்கொண்டிருக்கக் கூடிய நாட்டின் 80 சதவிகிதத்திற்கும் மேலானவர்களின் நிலையான வருவாய்ப் பெருக்கத்திற்கான சவால்கள் மற்றும் பிரச்சனைகள் அனைத்தையும் போக்குவதற்கான வாய்ப்பு கால்நடை வளர்ப்பு மற்றும் கால்நடைத் துறையின் முன்னே நிற்கிறது. “டீம் தனுவாஸ்” நம் முன்னே இருக்கிற சவால்களை எதிர்கொள்ளும் என்று நான் மிகுந்த நம்பிக்கை கொள்கிறேன். என் இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துகளைப் பரிமாறிக்கொள்கிற அதே வேளையில், கால்நடை வளர்ப்புச் சமூகத்திற்குச் சிறந்த வழியில் பணியாற்றுகிற இலட்சியப் பாதையில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்றுவோம்.

**முனைவர் சு. திலகர்**, துணைவேந்தர்

## புதிய துணைவேந்தர்

பேராசிரியர் முனைவர் சு. திலகர் அவர்கள், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் துணைவேந்தராக 10.12.2014அன்று பிற்பகல் பொறுப்பேற்றுக் கொண்டார். விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த இவர், சிவகங்கை மாவட்டத்தில் திருப்புவனம் நகருக்கு அருகிலுள்ள டி. ஆலங்குளம் கிராமத்தில் பிறந்தார். பள்ளிப் படிப்பைத் திருப்புவனத்தில் முடித்த பின், 1978இல் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பி.வி.எஸ்சி பட்டப் படிப்பையும், 1983இல் எம்.வி.எஸ்சி. (அறுவை மருத்துவம்) பட்டப் படிப்பையும் நிறைவுசெய்தார். தமது முனைவர் பட்டப் படிப்பை 1993இல் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் முடித்தார். 1999இல் இந்தியக் கால்நடை அறுவை மருத்துவச் சங்கத்தின் ஆராய்ச்சியாளராகத் தேர்வு செய்யப்பெற்றார். 1980இல் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைச் சிகிச்சையியல் துறையில் ஆராய்ச்சி உதவியாளராகத் தமது பணியைத் தொடங்கிய இவர், கல்லூரி முதல்வர் பொறுப்பும் வகித்தார். ஏறக்குறைய 33 ஆண்டுகள் கல்விப் பணி ஆற்றிய இவர், பல்வேறு பொறுப்புகளை வகித்துள்ளார். 1994இல் அறுவைச் சிகிச்சையியல் பேராசிரியராகப் பணி உயர்வு பெற்ற இவர், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் சிகிச்சைத் துறை மற்றும் மாதவரம், பல்கலைக்கழகப் புறநகர் கால்நடை மருத்துவமனையின் தலைவராகப் பணியாற்றிய காலங்களில் இவற்றின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியுள்ளார். இதன் பின்னர், 1999–2003 வரை சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் சிகிச்சைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவராகவும், 2008வரை மலேசியாவில் உள்ள புத்ரா பல்கலைக்கழகத்தில் அறுவைச் சிகிச்சையியல் பேராசிரியராகவும் பணிபுரிந்துள்ளார். பின்னர் மாதவரம், பல்கலைக்கழகப் புறநகர் கால்நடை மருத்துவமனைப் பேராசிரியர் மற்றும் தலைவராகவும், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைச் சிகிச்சையியல், கால்நடை அறுவைச் சிகிச்சையியல் மற்றும்



ஊடுகதிரியக்கவியல் துறைகளின் பேராசிரியர் மற்றும் தலைவராகவும் பணிப் பொறுப்பு வகித்துள்ளார். 01.06.2010 முதல் 26.07.2011 வரை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் தேர்வாணையராகவும், 27.07.2011முதல் 26.07.2014வரை புதுச்சேரி, ராஜிவ்காந்தி கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வராகவும் பணியாற்றியுள்ளார். 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் மாணவர் சேர்க்கைக் குழுவின் இணை ஒருங்கிணைப்பாளராகப் பொறுப்பு வகித்தார்.

பேராசிரியர் முனைவர் சு. திலகர் அவர்களின் 100க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் தேசிய மற்றும் பன்னாட்டு இதழ்களில் வெளிவந்துள்ளன. 4 புத்தகங்கள், 9 கையேடுகள் மற்றும் பல மடிப்பிதழ்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவருக்கு 1995இல் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் சிறந்த ஆசிரியர் விருதும், 1998இல் தமிழ்நாடு அரசின் சிறந்த அறிவியலாளர் விருதும் வழங்கப்பட்டன. இவருக்கு 30 ஆண்டு காலச் சிறந்த பணிக்கான பாராட்டுச் சான்றிதழும், பல பல்கலைக்கழகம் மற்றும் சங்கங்களின் விருதுகள் மற்றும் பதக்கங்களும் அளிக்கப்பட்டுள்ளன. இவர் பல தேசிய மற்றும் பன்னாட்டுக் கருத்தரங்குகளில் பங்கேற்று 100க்கும் மேற்பட்ட அறிவியல் ஆய்வுக் கட்டுரைகளையும், முதன்மையான ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் வழங்கியுள்ளார். இவரின் தீவிர முயற்சியின் காரணமாக, அமெரிக்காவின் மிச்சிகன் மாநிலப் பல்கலைக்கழகம் மற்றும் வங்காளதேசத்தின் சிட்டகாங் பல்கலைக்கழகத்தின் மாணவர்களுக்காக 2001இல் பயிற்சி அளிக்கப்பட்டது. வெளிநாட்டு மாணவர்களுக்கான இப்பயிற்சி இன்றும் அளிக்கப்பட்டு வருவதோடு, புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளவும் வழிவகுத்தது. வேளாண் மனித வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அமெரிக்காவில் பயிற்சி மேற்கொண்டார். பல்வேறு புறநிலை நிதி முகமை களின் நிதியுதவியிலான 15 ஆராய்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி யுள்ளார். தமிழ்நாடு கால்நடை மருத்துவக் கவுன்சில், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பாடத் திட்டக் குழு மற்றும் கல்விக் குழு ஆகியவற்றின் உறுப்பினராகவும், பல்கலைக்கழக முன்னாள் மாணவர் சங்கத்தின் செயலாளராகவும், பல்கலைக்கழக மருத்துவ மேலாண்மைக் குழுவின் உறுப்பினர்–செயலராகவும், புதுச்சேரி அரசின் மாணவர் சேர்க்கைக் குழுவின் இணை ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். இவை மட்டுமல்லாது, பல்வேறு மருத்துவச் சங்கங்கள், பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரி நிலையிலான பல்வேறு குழுக்களின் உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை அறுவைச் சிகிச்சை மற்றும் ஊடுகதிரியக்கவியல் துறையில் பேராசிரியராகப் பணியில் சேர்ந்த இவர், அக்டோபர் 2014இல் பணி ஓய்வு பெற்றார். செல்லப் பிராணிகளுக்கான சிறந்த அறுவைச் சிகிச்சை நிபுணராக அனைவராலும் அறியப்பட்ட இவர், தேசிய மற்றும் பன்னாட்டுக் கால்நடை மருத்துவர்களின் நலன் கருதிப் பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டுப் பயிற்சிகளை நடத்தியுள்ளார்.

## கல்லூரி, விடுதி மற்றும் விளையாட்டு நாள் விழா–2014



ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கல்லூரி மற்றும் விடுதி ஆண்டு விழா 13.12.2014 அன்று கொண்டாடப்பட்டது. மாண்புமிகு தமிழக வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமையேற்றுத் தலைமையுரை ஆற்றிப் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். மாண்புமிகு தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. டி.கே.எம். சின்னையா அவர்கள் ஆண்டு விழா மலரை வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார். பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் கல்லூரியின் செஞ்சுருள் சங்க மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்புரையாற்றினார். தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் மருத்துவர் ந. சுப்பையன் இ.ஆ.ப., பல்கலைக்கழகத் தேர்வாணையர் முனைவர் மா. திருநாவுக்கரசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரி முதல்வர் முனைவர் சி. வீரபாண்டியன் அவர்கள் வரவேற்புரை ஆற்றி, கல்லூரி ஆண்டறிக்கை வாசித்தார். இறுதியாக மூன்றாம் ஆண்டு மாணவர் கெ.வெ. மேகநாத் நன்றியுரை நல்கினார். இதனைத் தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

கல்லூரியின் இரண்டாம் ஆண்டு விளையாட்டு விழா 13.12.2014அன்று கொண்டாடப்பட்டது. விழாவினை ஒரத்தநாடு, காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர் திரு. எஸ். விஜயகுமார் அவர்கள் துவக்கி வைத்தார். பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். பல்கலைக்கழகத் தேர்வாணையர் முனைவர் மா. திருநாவுக்கரசு மற்றும் ஈச்சங்கோட்டை, வேளாண் அறிவியல் கல்லூரியின் சிறப்பு அலுவலர் முனைவர் சாமிஅய்யன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. கல்லூரி முதல்வர் முனைவர் சி. வீரபாண்டியன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துச் சிறப்புரை ஆற்றினார்.

## தேசியக் கருத்தரங்கு

“கால்நடை உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து உருவாக்குதலில் உள்ள சவால்கள் மற்றும் உத்திகள் குறித்த ஒழுங்குமுறை” என்ற இந்திய நச்சியல் சங்கத்தின் தேசிய அளவிலான கருத்தரங்கு, கால்நடைத் தீவனம் மற்றும் மருந்துக் கண்காணிப்பு ஆய்வகம்மூலம் சென்னைக் கால்நடை




மருத்துவக் கல்லூரியில் 10.12.2014முதல் 12.12.2014வரை நடத்தப்பெற்றது. தேசியப் பால்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் துணைவேந்தர் மற்றும் இயக்குநர் முனைவர் ஏ.கே. ஸ்ரீவஸ்தவா அவர்கள் கருத்தரங்கைத் துவக்கிவைத்து, கருத்தரங்க மலரை வெளியிட்டார். பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். இங்கிலாந்தின் DOWஇன் வேளாண் அறிவியல் ஆராய்ச்சியாளர் மருத்துவர் ரிச்சர்டு பில்லிங்டன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். தேசிய நச்சியல் சங்கத் தலைவரும் மதுரா கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வருமான முனைவர் சதீஷ் குமார் கார்க் அவர்கள் நிறைவுரை ஆற்றினார். பல்கலைக்கழகக் கால்நடை நலக்கல்வி மைய இயக்குநர்(பொ.) முனைவர் கா. குமணன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கால்நடைத் தீவனம் மற்றும் உணவுப் பாதுகாப்பிற்கான மருந்துக் கண்காணிப்பு ஆய்வகத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஜி. சரத்சந்திரா அவர்கள் நன்றியுரை ஆற்றினார். நாடு முழுவதிலும் இருந்து 200 விஞ்ஞானிகள் கருத்தரங்கில் பங்கேற்றனர். கருத்தரங்கின் நிறைவு விழாவில் பஞ்சாப், லூதியானா, கால்நடை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் முனைவர் ஹர்பால் சிங் சந்து அவர்கள் நிறைவுரை ஆற்றி, சிறந்த இளம் விஞ்ஞானி மற்றும் சிறந்த வாய்மொழி மற்றும் சுவரிதழ்களுக்கான சான்றிதழ்களை வழங்கினார். பெங்களூரு, பயோநீட்ஸ், முதன்மைச் செயல் அலுவலர் டாக்டர் எஸ்.என். வினய பாபு அவர்கள் தலைமையுரை ஆற்றினார். நச்சூட்டியல் ஆலோசகர் முனைவர் பி. பாலகிருஷ்ணமூர்த்தி, பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் தே. தியாகராஜன், தேசிய நச்சியல் சங்கப் பொதுச் செயலாளர் முனைவர் ஜெகதீஸ் சங்கனால் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

## தேசியக் கருத்தரங்கு

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழா ஆண்டை முன்னிட்டு சாந்திநல்லா, ஆடு இனவிருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் 11.12.2014 மற்றும் 12.12.2014 ஆகிய நாட்களில் “இந்தியாவில் சிறு அசையூண் பிராணிகளின் எதிர்கால வாய்ப்பு வளம் மற்றும் சவால்கள்” பற்றிய தேசியக் கருத்தரங்கு நடைபெற்றது. கருத்தரங்கைத் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், இந்தியச் செம்மறி மற்றும் வெள்ளாடுகளின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டுச் சங்கம் ஆகியவை இணைந்து நடத்தின. கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ம. பாபு அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து, கருத்தரங்கைத் துவக்கிவைத்து உரை நிகழ்த்தினார். காஷ்மீர் வேளாண் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் கால்நடை அறிவியல் புல முதல்வர் முனைவர் சர்பாரஸ் ஏ. வானி, மத்திய ஆடு மற்றும் கம்பளி ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மை விஞ்ஞானி முனைவர் ஏ.கே. பட்டேல், மக்தூம் மத்திய ஆடுகள் ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மை விஞ்ஞானி முனைவர் சாக்கெட் பூஷன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கருத்தரங்கத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து 101 சிறப்பு விருந்தினர்கள் பங்கேற்றனர். நிறைவு விழாவில் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் அவர்கள் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.

## முதுநிலைப் பட்டயப் படிப்புகளுக்கான நேரடிப் பயிற்சி

பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககம்மூலம் தொலைநிலைக் கல்வி வழியில் அளிக்கப்படும் முதுநிலைப் பட்டயப் படிப்புகளின்(2014–2015 பிரிவு) முதல் பருவத்திற்கான 10 நாள் நேரடிப் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மற்றும் தஞ்சாவூர் கால்நடைப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்களில் நடைபெற்ற 19 முதுநிலைப் பட்டயப் படிப்புகளின் நேரடிப் பயிற்சி வகுப்புகளில் 104 மாணவர்கள் பங்கேற்றனர். தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் தே. தியாகராஜன், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் கொ.ஆ. துரைசாமி ஆகியோர் நாமக்கல்லில் நடைபெற்ற நேரடிப் பயிற்சி வகுப்புகளில் மாணவர்களுடன் கலந்துரையாடினார். 17.12.2014அன்று சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற கலந்தரையாடலில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் பங்கேற்று மாணவர்களுடன் கலந்துரையாடி, முதுநிலைப் பட்டயப் படிப்புகளின் தரத்தை மேம்படுத்துவதன் தேவையை வலியுறுத்தினார். நிகழ்ச்சியில் தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் தே. தியாகராஜன், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் ச.அ. அசோகன், பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர்(பொ.) முனைவர் சொ.ரா. சீனிவாசன், பாடத்திட்ட இயக்குநர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

## கல்வி நிலையப் பணி

### சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி

### பன்னாட்டுக் கருத்தரங்கு

கல்லூரியின் கால்நடை இனப்பெருக்கம் மற்றும் ஈனியல் துறையும் அமெரிக்காவின் வாஷிங்டன் மாகாணப் பல்கலைக்கழகமும் இணைந்து “கால்நடை இனப்பெருக்கத்தை அதிகப்படுத்துவதில் தற்போதைய சவால்களும் மாற்று ஆய்வும்” குறித்த பன்னாட்டுக் கருத்தரங்கைக் கல்லூரியில் 04.12.2014 மற்றும் 05.12.2014ஆம் தேதிகளில் நடத்தின.




மத்திய அரசின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் கால்நடைப் பராமரிப்பு ஆணையர் டாக்டர் சுரேஷ் எஸ். ஹோனப்பகோல் அவர்கள் கருத்தரங்கைத் துவக்கிவைத்தார். பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் ச.அ. அசோகன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கருத்தரங்கின் அமைப்புச் செயலாளர் முனைவர் கே. குலசேகர் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். இந்தியா மற்றும் அயல்நாடுகளிலிருந்து மொத்தம் 232 சிறப்பு விருந்தினர்கள் கருத்தரங்கில் பங்கேற்றனர். கருத்தரங்கின் நிறைவு விழாவில் வாஷிங்டன் மாகாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் லாரன்ஸ் ஃபாக்ஸ் அவர்கள் பரிசுகள் வழங்கினார்.

## தேசியக் கருத்தரங்கு



கல்லூரியின் இறைச்சி அறிவியல் தொழில்நுட்பத் துறை, இறைச்சியியல் வல்லுநர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர் அமைப்பின் முதல் மாநாடு மற்றும் “இந்திய இறைச்சித் தொழிலில் அண்மைக்கால மற்றும் எதிர்காலப் போக்குகளுக்கான கல்வி மற்றும் ஆராய்ச்சி அணுகுமுறைகள்” குறித்த கருத்தரங்கை 15.12.2014 மற்றும் 16.12.2014ஆம் தேதிகளில் நடத்தியது. பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் கருத்தரங்கைத் துவக்கிவைத்து, ஓய்வுபெற்ற இறைச்சியியல் வல்லுநர்களைச் சிறப்புச் செய்து, இறைச்சியியல் புலம்சார்ந்த நான்கு சிறந்த அறிவியலாளர்களுக்கு டாக்டர் எம். ரங்கநாதன் நினைவு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கினார். முனைவர் ஏ.எம். சண்முகம், முனைவர் ஜெ. ஆப்ரகாம், முனைவர் நாபா. கொண்டையா, முனைவர் மஸ்தான் ரெட்டி ஆகியோர் துவக்கவுரை ஆற்றினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் முதல்வர்(பொ.) முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். இறைச்சி அறிவியல் தொழில்நுட்பத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ராபின்சன் ஜெ.ஜெ. ஆப்ரகாம் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். கருத்தரங்கில் 265 சிறப்பு விருந்தினர்கள் பங்கேற்றனர். பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் நிறைவுரை ஆற்றி, பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழும், வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசும் வழங்கினார். பல்கலைக்கழகத்தின் உணவு அறிவியல் புல முதல்வர் முனைவர் தி. சிவக்குமார் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

## அஸ்காடு பயிலரங்கு

கல்லூரியின் கால்நடை நோய் நிகழ்வாய்வியல் மற்றும் தடுப்பு மருந்தியல் துறை, “கோமாரி நோயைக் கட்டுப்படுத்தல் மற்றும் பராமரித்தலைச் சிறப்புக் கவனப்படுத்திக் கால்நடை நோய் நிகழ்வாய்வியல்” குறித்த பயிலரங்கை இரு பிரிவாக 24.11.2014 – 28.11.2014 மற்றும் 01.12.2014 –05.12.2014ஆம் தேதிகளில் நடத்தியது. பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பி.ஜ. கணேசன் அவர்கள் பயிலரங்கை ஒருங்கிணைத்தனர். தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்புத் துறையைச் சார்ந்த 25 கால்நடை மருத்துவர்கள் பயிலரங்கில் பங்கேற்றனர்.

## மருந்து உற்பத்தியாளர்கள் – மாணவர்கள் சந்திப்பு

கல்லூரியின் கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியல் துறையினால் 03.12.2014 அன்று கால்நடை மருந்து உற்பத்தியாளர்கள் – மாணவர்கள் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சந்திப்பில் இளநிலைப் பட்டப் படிப்பின் இறுதி யாண்டு (2010–11ஆம்பிரிவு) மாணவர்கள் 127 பேர் பங்கேற்றனர். சுமார் 14 மருந்து தயாரிக்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கேற்று, தங்கள் நிறுவனப் பொருட்களைக் காட்சிக்கு வைத்து மாணவர்களுடன் கலந்துரையாடினர். கல்லூரி முதல்வர் முனைவர்(பொ.) ச.அ. அசோகன், பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர்(பொ.) முனைவர் சொ. ரா. சீனிவாசன் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்று, வாழ்த்துரை வழங்கினர். கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சு. செல்வசுப்பிரமணியன் அவர்கள் வரவேற்புரை நல்கினார்.

## நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

### கோழியின உயர்கல்வி மையப் பயிற்சி

கல்லூரியின் கோழியின உயர்கல்வி மையத்தில் “சுற்றுச்சூழல் மற்றும் பண்ணை மேலாண்மை மூலம் உலக வெப்பமாதலைத் தடுத்துப் பண்ணை உற்பத்தியைப் பெருக்குதல்” குறித்த தேசிய அளவிலான பயிற்சி 26.11.2014 முதல் 16.12.2014 வரை

நடைபெற்றது. பயிற்சியில் அஸ்ஸாம், தெலுங்கானா, கர்நாடகா, ஜம்மு–காஷ்மீர் மற்றும் தமிழ்நாடு சார்ந்த பல்கலைக்கழகங்களின் 15 பேராசிரியர்கள் பங்கேற்றனர். கல்லூரி முதல்வர் முனைவர் கொ.ஆ. துரைசாமி அவர்கள் பயிற்சியைத் துவக்கிவைத்து, பயிற்சிக் கையேட்டினை வெளியிட்டார். விரிவுரைகள் மற்றும் செய்முறைப் பயிற்சிகளோடு களப் பார்வையிடலுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. பயிற்சி நிறைவு விழாவில் பல்கலைக்கழகக் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ம. பாபு அவர்கள் பங்கேற்று, பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கிச் சிறப்புரையாற்றினார்.

### மருந்து உற்பத்தியாளர்கள் – மாணவர்கள் சந்திப்பு 2014 – 2015




கல்லூரியின் கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியல் துறையினரால் மருந்து உற்பத்தியாளர்கள் மற்றும் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்கள் சந்திப்பு, 02.12.2014 அன்று நடத்தப்பட்டது. துறையின் இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் அ. ஜெகதீசுவரன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். கல்லூரி முதல்வர் (பொறுப்பு) மற்றும் கால்நடை உயிர்வேதியியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஆர். இரவி அவர்கள் விழாத் துவக்கவுரையாற்றினார். கால்நடை மற்றும் கோழி மருந்து உற்பத்தியாளர்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தத்தம் மருந்துகளைக் காட்சிக்கு வைத்து, அவற்றின் பயன்கள் குறித்து விரிவாக ஒலி, ஒளிச் சாதனங்களோடு விளக்கினர்.

### புத்தகக் கண்காட்சி

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இரு நாள் புத்தகக் கண்காட்சி 29.12.2014 மற்றும் 30.12.2014 ஆம் தேதிகளில் நடந்தது. கால்நடை மருத்துவம் மற்றும் பிற துறைகளைச் சார்ந்த புத்தகங்கள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்பெறுவதற்கு ஏற்ற வகையில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. கல்லூரியின் நூலகம் மற்றும் துறைசார் நூலகங்களுக்காக 533 புத்தகங்கள் வாங்கப்பட்டன.

## திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

### பன்னாட்டுப் பயிலரங்கு

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் அமெரிக்காவின் வாஷிங்டன்



மாகாணப் பல்கலைக்கழகமும் இணைந்து “சிறிய அசைபோடும் கால்நடைகளில் இனப்பெருக்கத் தொழில்நுட்பங்கள்” குறித்த இரு நாள் பன்னாட்டுப் பயிலரங்கை 15.12.2014 மற்றும் 16.12.2014 ஆம் தேதிகளில் நடத்தின. சிறிய அசைபோடும் கால்நடைகளின் இனப்பெருக்கத்தில் சிறப்புவாய்ந்த 33 கால்நடை மருத்துவர்கள் பயிலரங்கில் பங்கேற்றனர். 16.12.2014 அன்று நடைபெற்ற பயிலரங்கின் நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் தலைமை வகித்து, பயிலரங்கக் கையேடு வெளியிட்டார். அமெரிக்க வாஷிங்டன் மாகாணப் பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவக் கல்லூரியின் சிகிச்சையியல் துறையின் இணைப் பேராசிரியர் முனைவர் ராம் காசிமாணிக்கம் அவர்கள் தமது சிறப்புரையில் சிறிய அசைபோடும் கால்நடைகள் இனப்பெருக்கத்தின் அண்மைக்கால நுட்பங்கள் குறித்து விவரித்தார்.

### பண்ணையாளர் சந்திப்பு மற்றும் கருத்தரங்கு



கல்லூரியின்மூலம் பண்ணையாளர் சந்திப்பும் பல்கலைக்கழகத்தின் சுழல்நிதித் திட்டத்தின்கீழ் “செம்மறியாடு வளர்ப்புக்கானநவீனத்தொழில்நுட்பங்கள்” குறித்த கருத்தரங்கும் 30.12.2014 அன்று நடத்தப்பட்டன. திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களைச் சார்ந்த 60 பண்ணையாளர்கள் கருத்தரங்கில் பங்கேற்றனர். பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் கருத்தரங்கின் நிறைவு விழாவில் பங்கேற்று, நிறைவுரை ஆற்றிப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் மற்றும் இடுபொருட்கள் வழங்கினார். அவர், தமது நிறைவுரையில் அதிக இலாபம் மற்றும் சந்தை வாய்ப்புகளைப்

பெறச் செம்மறியாடு வளர்ப்போர் சங்கத்தை உருவாக்க வேண்டும் என்று பண்ணையாளர்களைக் கேட்டுக்கொண்டார். திருநெல்வேலி, நபார்டு வங்கியின் கூடுதல் தலைமை மேலாளர் திரு. கே. ராமலிங்கம் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்.

### ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

#### விவசாயக் கண்காட்சி, 2014இல் பங்கேற்பு



19.12.2014 முதல் 22.12.14 வரை தஞ்சாவூரில் நடைபெற்ற தினமலர் விவசாயக் கண்காட்சி – 2014இல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் பங்கேற்றது. மேலும், 22.12.2014 அன்று நடைபெற்ற கால்நடை வளர்ப்பு குறித்த சிறப்புக் கருத்தரங்கில் கல்லூரிப் பேராசிரியர்கள் பங்கேற்றுக் கால்நடைப் பராமரிப்பு தொடர்பாகக் கால்நடைப் பண்ணையாளர்களின் சந்தேகங்களுக்குப் பதில் அளித்தனர்.

### செயல்திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்கு மஹிந்த்ரா கன்சல்டிங் இன்ஜினியர்ஸ் சிஎஸ்ஆர் நிதியுதவி

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், செல்லமுத்து அறக்கட்டளை ஆராய்ச்சி நிறுவனம், மஹிந்த்ரா கன்சல்டிங் இன்ஜினியர்ஸ் தனியார் நிறுவனம் ஆகியவற்றுக்கிடையே ஏற்பட்ட மும்முனைப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்கீழ், எம்.எஸ். செல்லமுத்து அறக்கட்டளையுடன் இணைந்து “மதுரை மாவட்டத்தில் மனநோய் குணமடைந்தோரின் வாழ்வை கால்நடை வளர்ப்புமூலம் மேம்படுத்தல் குறித்த செயல்திறன் மேம்பாட்டு பயிற்சி”க்காகப் பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககத்திற்கு ரூபாய் 2,93,250/– மஹிந்த்ரா கன்சல்டிங் இன்ஜினியர்ஸ் நிறுவனத்தின் சிஎஸ்ஆர் நிதியுதவியின்மூலம் வழங்கப்பட்டுள்ளது.

### விரிவாக்கப் பணி

#### செயல்திறன் மேம்பாடு மற்றும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள்

பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தின்மூலம் வெள்ளாடு வளர்ப்பு, கறவைமாடு வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு, ஜப்பானியக்காடை வளர்ப்பு, வெண்பன்றி வளர்ப்பு, பால்பண்ணை உதவியாளர் மற்றும் பால் பதனநிலை உதவியாளர் ஆகிய செயல்திறன் மேம்பாடு மற்றும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் பால்வள அறிவியல் துறை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மேல்மருவத்தூர் மற்றும் சேலம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள்; காட்டுப்பாக்கம் மையத் தீவனத் தொழில்நுட்பப் பிரிவு, மாதவரம் கோழியின ஆராய்ச்சி நிலையம் மற்றும் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணை ஆகியவற்றில் டிசம்பர் 2014இல் நடத்தப்பட்டன. பயிற்சிகளில் 29 பேர் பதிவுசெய்து பயிற்சியை நிறைவுசெய்தனர்.

#### பயிற்சி

- தருமபுரி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம், தமிழக அரசின் கோழி வளர்ப்பு மேம்பாட்டுத் திட்ட நிதியின்கீழ் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்காக “நாட்டுக்கோழி வளர்ப்பு” குறித்த பயிற்சி மற்றும் கண்காட்சி 02.12.2014, 03.12.2014 மற்றும் 05.12.2014ஆம் தேதிகளில் நடைபெற்றது. தருமபுரி மாவட்ட ஆட்சியர் திரு. கே. விவேகானந்தன் இ.ஆ.ப., பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் சி. சந்திரகாசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் சமூகத்தைச் சார்ந்த 7 பயனாளிகள் உட்பட மொத்தம் 85 பயனாளிகள் பயிற்சியில் பங்கேற்றனர்.

- வேலூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமும், வேலூர், புதுவாழ்வுத் திட்டமும் இணைந்து கறவைமாடு வளர்ப்பு குறித்த புற வளாகப் பயிற்சியை 10.12.2014–12.12.2014, 16.12.2014–18.12.2014, 22.12.2014–24.12.2014 ஆம் தேதிகளில் முறையே மேல்பட்டி, வாணியம்பாடி மற்றும் வடபுதுப்பட்டில் நடத்தின. 30 மகளிர் பயனாளிகள் பயிற்சியில் பங்கேற்றனர். இம் மையம்மூலம் “கறவை மாடு வளர்ப்பு” குறித்த ஆறு நாள் பயிற்சி 01.12.2014முதல் 06.12.2014வரை கசம் கிராமத்தில் நடத்தப்பட்டது. மொத்தம் 27 மகளிர் பயனாளிகள் பயிற்சியில் பங்கேற்றனர்.

- கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் “இலாபகரமான கறவைமாடு வளர்ப்பும் பண்ணைக் கழிவுகளின் பயன்பாடும்” குறித்த சுய வேலைவாய்ப்புப் பயிற்சி, கரூர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரகச் சுய வேலைவாய்ப்புப் பயிற்சி நிலையத்தின் நிதியுதவியில் 22.12.2014முதல் 29.12.2014வரை நடத்தப்பட்டது. மகளிர் திட்டத்தின் வழியாக உருவாக்கப்பட்ட தொழில் குழுக்களின் தலைவிகள் ஆறு பேரும், பாலவிடுதி கிராமத்திலிருந்து உழவர் மன்ற விவசாயிகள் 23 பேருமாக மொத்தம் 29 பேர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

### நீலநாக்குநோய்த் தடுப்பு மருந்து வெளியீடு

பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள், இந்தியன் இமுனோலாஜிகல்ஸ் நிறுவனம் அறிமுகப்படுத்திய (பல்முனை நீலநாக்கு நோய்த் தடுப்பு மருந்து என்று சொல்லக்கூடிய) ரக்ஷா–ப்ளூ தடுப்பு மருந்தை

Posted on 23.01.2015 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 21.01.2015

Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/15-17
Registration No.TN/TBM/32/2015-17

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.
Printed and Published by
Dr. D. Thyagarajan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
**Editor : Dr. D. Thyagarajan,** M.V.Sc., Ph.D., **Phone : 044-2555 4411**
**E-mail : dde@tanuvas.org.in**




08.01.2015அன்று ஐதராபாத்தில் நடந்த நிகழ்ச்சியில் வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் உதவித் தலைமை இயக்குநர் (கால்நடை நலம்) முனைவர் கயா பிரசாத், இந்தியன் இமுனோலாஜிகல்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. கே.வி. பாலசுப்பிரமணியன், முதன்மைப் பொது மேலாளர் டாக்டர் ஜி.எஸ். ரெட்டி, இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஆனந்தகுமார், ஆந்திரப் பிரதேசத்தின் கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநர் டாக்டர் கொண்டல் ராவ், தெலுங்கானாவின் கால்நடைப் பராமரிப்புத் துறையின் இயக்குநர் டாக்டர் டி. வெங்கடேஷ்வர்லு ஆகியோர் பங்கேற்றனர். இத்தடுப்பு மருந்து அனைத்திந்திய நீலநாக்கு நோய்த் தடுப்பு மருந்து இணைப்புத் திட்டத்தின்கீழ் பல்கலைக்கழகத்தின் கால்நடை நலக் கல்வி மையத்தின் நச்சுயிரி தடுப்பு மருந்து ஆராய்ச்சிப் பிரிவில் உருவாக்கப்பட்டது. தனுவாஸ் மையத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர் முனைவர் ஒய். கிருஷ்ணமோகன் ரெட்டி, ஐதராபாத் மையத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர் முனைவர் ஒய். நரசிம்ஹ ரெட்டி, ஹிசார் மையத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர் டாக்டர் மீனாட்சி பிரசாத் ஆகியோர் தடுப்பு மருந்து குறித்து அறிக்கை அளித்தனர்.

## விரிவாக்கம் மற்றும் ஊடக இணைப்பு நிகழ்ச்சி

பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்ககத்தின்மூலம் பெங்களூரு, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் மண்டலம் எட்டு, மண்டலத் திட்ட இயக்குநரகத்தின் நிதியுதவியில் "கால்நடை மற்றும் கோழிகளுக்கான சந்தை வாய்ப்புகளை உருவாக்குதல்" குறித்த விரிவாக்கம் மற்றும் ஊடக இணைப்பு நிகழ்ச்சி, திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பப் பூங்காக் கலையரங்கில் 29.12.2014 மற்றும் 30.12.2014ஆம் தேதிகளில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் தலைமை வகித்து, கால்நடை வளர்ப்பு குறித்த தொழில்நுட்ப விளக்கப் படங்கள் மற்றும் விரிவாக்கக் கல்வி இயக்ககம் – ஒரு பார்வை குறித்த நூலை வெளியிட்டுத் தலைமையுரை ஆற்றினார். துணைவேந்தர் தமது உரையில் பொருட்களின் நேரடிச் சந்தைமூலம் பண்ணையாளர்கள் 30 சதவிகித இலாபத்தைப் பெற முடியும் என்பதால், விரிவாக்கப் பணியாளர்கள் நேரடிச் சந்தை வாய்ப்புகள் குறித்துப் பண்ணையாளர்களுக்கு விளக்க வேண்டும் என்றார். சென்னை அகில இந்திய வானொலி நிலைய இயக்குநர் திரு. கே. சுப்ரமணியன் அவர்கள் பண்ணை வானொலிப் புத்தகத்தை வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினார். விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் சி. சந்திரகாசன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். வேளாண் அறிவியல் நிலையங்கள் மற்றும் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த 72 வல்லுநர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். விரிவாக்கக் கல்வி இயக்குநர் அவர்கள் நிறைவுரை ஆற்றிப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.

## பணி ஒய்வு



காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுநிலைப் பட்ட ஆராய்ச்சி நிலைய அலுவலகத்தின் மேலாளர் திரு. ஜி. மனோகரன் அவர்கள் 31.12.2014அன்று பணி ஓய்வு பெற்றார். 30.12.1956இல் பிறந்த இவர், 35 ஆண்டும் 04 மாதமும் பணியாற்றியுள்ளார்.



திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய அலுவலகத்தின் நிர்வாக அலுவலர் திரு. எஸ். மாதவன் அவர்கள் 31.12.2014அன்று பணி ஓய்வு பெற்றார். 04.12.1956இல் பிறந்த இவர், 32 ஆண்டும் 10 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பொட்டனேரி, மேச்சேரி ஆடு ஆராய்ச்சி நிலையத்தின் உடனாள் திரு. ஜி. மாணிக்கம் அவர்கள் 31.12.2014அன்று பணி ஓய்வு பெற்றார். 15.12.1956இல் பிறந்த இவர், 27 ஆண்டும் 08 மாதமும் பணியாற்றியுள்ளார்.